**<u>S.C.No. 129 / 2021</u>**

**PW1 – Thiru. Vasiath khan**

**19.01.2026**

**(A1 died C/A, A2 is present)**

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை :</u>**

**நேரம் 17.00 மணி**

நான் இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே சாட்சியம் அளித்தது எனக்கு ஞாபகமுள்ளது. நான் MTH Road ல் Modern என்ற பெயரில் Fast Food கடையை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். என் கடையை ஒட்டியது போல் 1ஆவது எதிரி நடத்தி வந்த அண்ணாமலை என்ற ஓட்டல் உள்ளது என்றால் சரிதான். 1ஆவது எதிரிக்கும் எனக்கும் தொழில் போட்டி இருந்தது என்றால் சரிதான். அவர் கடையை விட என் கடையில் தான் வியாபாரம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். ஆகவே 1ஆவது எதிரி கடையை காலி செய்ய வேண்டும் என்று அடிக்கடி என்னை மிரட்டி வந்தார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது 1ஆவது எதிரி அந்த கடையை நடத்தவில்லை என்றால் சரிதான். வேறு ஒருவருக்கு லீசுக்கு விட்டிருந்தார். 1ஆவது எதிரியும் அவருடைய நண்பருக்கும் என் கடைக்கு சாப்பிடுவதற்கு அன்றைய தினம் மாலை 5.30 மணிக்கு வந்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பு வினோத் என்ற நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு பழக்கம் கிடையாது. இரண்டுபேரும் அன்றைய தினம் என் கடைக்கு சிக்கன் Fried Rice சாப்பிட வந்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே $^1/_2$ கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்தவுடன் காவல் நிலையத்தில் புகார்கொடுக்கவில்லை என்றால் சரிதான். இரவு 10.30 மணிக்கு தான் புகார் கொடுத்தேன். நான் புகார் கொடுப்பதற்கு முன்பதாக திருமுல்லைவாயில் Patrol போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் சம்பவயிடத்தை பார்வையிட்டு சென்றார்கள் என்றால்

சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக குறிப்பிட்டுள்ள இஷாத் த/பெ. அப்துல் மாலிக், நவுஷத் அலி த/பெ. அகமத் பாஷா ஆகியோர் எங்கள் ஜமாத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சாட்சி ரவி என்பவர் என் கடையில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். சாட்சி காதிப் என்பவர் என் கடைக்கு அருகில் Xerox கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். சாட்சி அமர்சந்தா என் கடையில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது 2 ஆவது எதிரியின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன்பிறகு அவரை நீதிமன்றத்தில் பார்த்தேன் என்றால் சரிதான். போலீசார் விசாரிக்கும்போது அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எதிரியின் பெயர் வினோத்குமார் என்று சொன்னதாகவும், அதன்பேரில் அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் 19–11–2015 அன்று அதிகாலை 2.30 மணிக்கு சம்பவம் நடந்ததாக போலீசாரிடம் கூறினேனா என்றால் இல்லை. என் கடைக்கு அருகிலுள்ள அந்த கடையை 1 ஆவது எதிரி தான் கத்தியை வைத்து கடையின் கண்ணாடியை உடைத்தார் என்றால் சரிதான். அதே போல் 1 ஆவது எதிரி தான் என் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டினார் என்றால் சரிதான். போலீசாரிடம் நான் புகார் கொடுக்கும்போதும், வாக்குமூலம் கொடுக்கும்போதும் சம்பவத்தின்போது என் அண்ணன் Ayub khan உடனிருந்தார் என்று கூறவில்லை என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரிக்கும்போது வாக்குமூலத்தின்போதும் என் அண்ணனுடன் சம்பவத்தின்போது சாட்சிகள் ரவீந்தரன், அமிர்சந்தா இருந்ததாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் கடையின் சேதமதிப்பு தோராயமாக ரூபாய் 30 ஆயிரம் இருக்கும் என்று கூறியுள்ளேன். அதற்கான சேதமதிப்பு குறித்து சான்றிதழ் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உடைந்த கண்ணாடி குறித்த விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து புகார் கொடுப்பதற்கு முன்பு கத்தி ஏதாவது கைப்பற்றினார்களா என்றால் Patrol வாகனத்தில் வந்தவர்கள் கத்தி மற்றும்

உடைந்த கண்ணாடியை கைப்பற்றினார்கள். எதிரிகளை கைது செய்தவிவரம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும என்றால் தமிழில் படிக்க தெரியும். எழுத தெரியாது. புகாரை காவல் நிலையத்தில் எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள். என்னை கொல்ல முயற்சி செய்தது 1ஆவது எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் வந்து என் அண்ணன் Ayub Khan ஐ அன்றைய தினமே விசாரிதார்களா என்றால் மறுநாள் விசாரித்தார்கள். சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறிய மதி (எ) மதிவதனன் என்பவர் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான்.

**நேரம் 17.20 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.